DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 139/2020** |
| Deposition of Witness for | : PW1 |
| Name | : ஆணைமுத்து |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 03.07.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 03 July 2026.

**எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது செந்தட்டியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1−ம் எதிரி வேலுசாமி இறந்துவிட்டார். சுமார் 8 ஆண்டுக்கு முன்பாக ஆணைமுத்துகோனார் இறந்துவிட்டார். அந்த ஈமச்சடங்கை செய்யவிடாமல் எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் உண்டு. 28.09.2017−ம் தேதி மாலை 3.00 மணிக்கு எங்கள் ஊர் சுடுகாட்டிற்கு கிழக்கே என் மனைவிக்கு சொந்தமான இடத்தில் நான் மாடு மேய்த்துக்கொண்டிருந்தேன். எதிரி வேலுசாமி, திருமலைபாண்டி, ராமச்சந்திரம் ஆகியோர் நான் நின்ற இடத்திற்கு வந்து

தாறுமாறாக என்னை அசிங்கமாக பேசி மறைத்து வைத்திருந்த அரிவாளை வைத்து வேலுசாமி என்னை இடது கை மணிக்கட்டிற்து மேலே அரிவாளால் வெட்டி இரத்தகாயம் ஏற்படுத்தினார். பின்னர் 3 எதிரிகளும் சேர்ந்து என்னிடம் ஏதாவது பிரச்சனை செய்தால் வெட்டி கொன்றுவிடுவோம் என மிரட்டினார்கள். மேற்படி சம்பவத்தை சங்கர மூர்த்தி, தெத்தி மாடசாமி, ஆகியோர்கள் பார்த்தார்கள். நான் உடனே சின்னகோவிலன்குளம் காவல் நிலையம் சென்றேன். போலிசார் அரசு மருத்துவமனைக்கு செல்லுங்கள் என்று கூறினார்கள். நான் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன். நான் சிகிச்சையில் இருந்தபோது, அங்கு வந்த போலிசார் என்னிடம் விசாரணை செய்தார்கள். நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் எனது மனைவி அறிவேன் சாட்சி கையெழுத்து செய்துள்ளார். அந்த புகார் வாக்குமூமலம் **அ.சா.ஆ.1 ஆகும்**. பின்னர் என்னை மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன் நான் அங்கு இருக்கும்போது போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். சம்பவச நாள் அன்று என்று என்னை வெட்டிய அரிவாளை பார்த்தால் தெரியுமா என்றால் அவர்கள் கொண்டு சென்றுவிட்டார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் போலிசார் விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1-ம் எதிரி எனக்கு என்ன உறவுமுறை என்றால் அவர் என் தங்கச்சியின் கணவர் ஆவார். 2-ம் எதிரி என் உடன் பிறந்த அண்ணன் மற்றம் 3-ம் எதிர என் உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். நான் எத்தனை வருடங்களாக ஆவுடையாள்புரத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் இந்த

பிரச்சனைக்கு பிறகு தான் அங்கு குடியிருந்து வருகிறேன். எங்கள் குடும்ப சொத்துக்களை பாக பிரிவு செய்வதற்காக பிரச்சணை இருந்து வந்தது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரணை செய்யும்போது நான் மாடு மேய்த்து கொண்டிருந்தேன் என்று கூறினேன்  என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் யார்யார் இருந்தார்கள் என்றால் நானும் என் மனைவி இருந்தோம். சம்பவம் நடைபெற்ற உடன் நேரடியாக காவல் நிலையம் சென்றேன்  என்றால் சரிதான். சம்பவயிடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு செல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்றால் சுமார் 15.00 நிமிடங்கள் ஆகும். காவல் நிலையத்தில் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். காவல் நிலயத்தில் இருந்து எவ்வளவு நேரத்தில் மருத்துவமனைக்கு வந்தேன் என்றால் 20.00 நிமிடத்தில் வந்தேன்.  புகார் வாக்குமூலத்தில் என்ன விபரம் உள்ளது என்று தெரியாது நான் கையெழுத்து செய்தேன். எங்கள் குடும்பத்தில் உள்ள சொத்து பிரச்சணை காரணமாகத்தான் எனக்கு தற்செயலாபக ஏற்பட்ட காயத்தினை தவறாக பயன்படுத்தி  எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.  நான் சொல்லக்கூடிய நாள், நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் எதிரிகள் என்னை இனிமேல் ஏதாவது பிரச்சணை செய்தால் 3 பேரும் வெட்டி கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள் என்ற சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

**மறுவிசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.